***World Christian Fellowship***
[www.wcflondon.com](http://www.wcflondon.com)
[wcflondon@gmail.com](mailto:wcflondon@gmail.com)

# தேவனுடைய இராஜ்யம்

*இராஜ்யம் என்பது "குறிப்பிட்ட பகுதியில் ராஜா தன்னுடைய ஆளுமையினால் தன்னுடைய சித்தம், நோக்கம், தரிசனத்தை நிறைவேற்றுவது ஆகும்."*

*வேதாகமத்தில் இயேசு கூறிய இராஜ்யம் என்பது*

- ✓ *தேவனுடைய அரசாங்கம்,*
- ✓ *தேவனுடைய ஆளுமை மற்றும்*
- ✓ *தேவன் பூமியை கட்டுப்படுத்தி ஆட்சி செய்வது.*

*தேவனுடைய இராஜ்யம் என்பது*

- ➢ *தேவனுடைய சித்தமே நிறைவேற்றப்படும்,*
- ➢ *தேவனே அதிகாரம் பெற்றவர்,*
- ➢ *பரலோகத்தின் செல்வாக்கு,*
- ➢ *தேவனின் நிர்வாகம் மற்றும்*
- ➢ *தேவனின் தாக்கம் மற்றும் செல்வாக்கு.*

*தேவனின் இராஜ்யம் பூமியில் செய்யப்படுவதன் ஒரு தோற்றம் என்பது இந்த **U.K** ன் தூதரங்கம் பிற நாட்டில் இருப்பது போன்றது. தூதரகம் பிரிட்டிஷின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது, இது வேறு நாட்டில் U.K ஆல் கட்டுப்படுத்த படுகிறது.*

*இப்பொழுது தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஆவிக்குரியவையாக உள்ளது!*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடைய ஆளுமைக்கு ஒப்புக்கொடுத்தவர்களின் இருதயம் மற்றும் வாழ்க்கையை தேவன் ஆள்கிறார்.*

*கிறிஸ்தவர்களாகிய நாம் U.K வின் தூதரகம் போன்றவர்கள்! காரிருளில் வாழும் அவிசுவாச மக்களின் இருதயம் மற்றும் வாழ்க்கையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சாத்தானால் ஆளுகை செய்யப்படும் உலகில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் ஆனால் நாம் தேவனால் கட்டுப்படுத்தப் படுபவர்கள். நற்செய்தி என்பது சாத்தானின் பிடியிலிருந்து விடுதலை ஆக்கப்பட்டு தேவனின் ராஜ்யத்தில் சேர புதிதாய் பிறப்பது ஆகும்.*

*ஒரு தூதரக பணியாளராக இந்த செய்தியை தான் நாம் உலக மக்களுக்கு நாம் எடுத்து சொல்ல வேண்டும்.*

*இயேசு பூமியில் இருக்கும் போது தேவராஜ்யத்தின் காரியங்களின் மாதிரியை காண்பித்தார், பிசாசுகளை துரத்துவது, வியாதிபட்டவர்களை குணமாக்குவது, மரித்தோரை எழுப்புவது மற்றும் தேவ ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பரப்புவது.*

**மதம் என்பது எப்போதும் தேவ ராஜ்யத்திற்கு எதிராக செயல்படும்.**

*மதம் என்பது மனிதன் ராஜ்யத்தை அடைய, மனிதனின் செயல்பாடுகளை கொண்டது.*

- ✓ *மதம் என்பது மனிதன் உலகத்தை விட்டு செல்ல ஆயத்தப்படுத்துகிறது*
- ✓ *ராஜ்யம் உலகத்தை மேற்கொள்ள மனிதனை வலுப்படுத்துகிறது.*

- ❖ *மதம் பரலோகத்தை நோக்கமாக கொண்டது*
- ❖ *ராஜ்யம் பூமியை நோக்கமாக கொண்டது.*

- ○ *மதம் தேவனிடம் பொய் சேருவது*
- ○ *ராஜ்யம் என்பது தேவன் நம்மிடம் வந்து சேருவது.*

- ▪ *மதம் பூமியை விட்டு செல்ல துரிதப்படுகிறது*
- ▪ *ராஜ்யம் தாக்கத்தை ஏற்படுத்தி,உற்சாகப்படுத்தி, உலகத்தை மாற்றுகிறது.*

- ✓ *மதம் உலகத்தை பரலோகமாக மற்ற முயற்சிக்கிறது*
- ✓ *ராஜ்யம் பரலோகத்தை பூமிக்கு கொண்டு வர முயற்சிக்கிறது.*

*இயேசு அவர் காலங்களில் இருந்த மத தலைவர்களை குறித்து வன்மையாக கண்டிக்கிறார்*

***மத்தேயு 23:13 &15, 13. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை.*** *"*

***15. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி***

***சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்.***

***மத்தேயு** 15:1-3, 1. **அப்பொழுது எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து:**2. **உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள்.**3. **அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?***

***மத்தேயு** 15:5, 5. **நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து**. Eng V6,*

***மத்தேயு** 5:20, **வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்***

***மத்தேயு** 21:31, 31. **இவ்விருவரில் எவன் தன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: மூத்தவன் தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

*தேவனுடைய ராஜ்யத்தை அடையாதவாறு இருக்கும் பெரிய தடைகளில் மதம் முக்கியமான ஒன்றாகும்*

# இயேசுவின் ஊழியம்

## *1. ராஜ்யம் பிரசங்கிக்கப்பட்டது*

***மத்தேயு 3:1-2, 1. அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: 2. மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்"***

***மத்தேயு 4:17, அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்."***

## *2. பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது*

***மத்தேயு 12:28, நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.***

## *3. ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே*

***லூக்கா 17:21, இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது, இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்."***

## *4. தேவ ராஜ்யத்தின் தன்மை*

***ரோமர் 14:17, தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.***

### *5. சாத்தானின் முடிவின் ஆரம்பம்*

***யோவான் 12:31, இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது, இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்.***

***யோவான் 16:11, இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.***

### *6. தேவ ராஜ்யத்தின் இரகசியங்கள்*

***மத்தேயு 13:11, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை.***

*வேதத்தில் மறைக்கப்பட்ட இரகசியங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் தெய்வீகமாக வெளிப்படுத்தப்பட்டது.*

a) *பரலோக ராஜ்யத்தினுடைய இரகசியம். (**மத்தேயு 13:3-50)***
b) *இஸ்ரவேலின் குருட்டுத்தன்மையின் இரகசியம். **(ரோமர் அதி.11)***
c) *சபையை குறித்த இரகசியம்(**அதாவது ஒரே சரீரம்**), **(எபேசியர் 3:1-12, 6:19 கொலோசெயர் 4:3)***
d) *சபையை குறித்த இரகசியம், **கிறிஸ்துவின் மணவாட்டி**. **(எபேசியர் 5:21-32)***
e) *இயேசுவின் தெய்வீகத்தன்மை குறித்த இரகசியம். (யோவான் 1:1-3, வ.14)*

*f) சபையின் எடுத்துக்கொள்ளப்படுதல்/மறுரூபமாகுதல் குறித்த இரகசியம். (1 **கொரிந்தியர்** 15:51-52 &1 **தெசலோனிக்கேயர்** 4:13-17)*
*g) இயேசுவின் முதலாம் வருகையை குறித்த இரகசியம்(அவர் பாடுகளை பற்றி). (1 **பேதுரு** 1:11, **மாற்கு** 8:31&**ஏசாயா** 53:3)*
*h) The mystery of the 2nd Coming of Christ. (**வெளிப்படுத்தல்** 1:7, 19:11, வ.12-16)*

## *1. ராஜா*

*தேவன் ராஜா தாவீதுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின் நிறைவு தான் இயேசு கிறிஸ்து. தாவீதின் சந்ததியிலிருந்து தேவன் ஒரு ராஜாவை எழுப்புவார் அவருடைய சிங்காசனம் மற்றும் ராஜ்யம் என்றைக்கும் நிலைத்திருக்கும் (2 **சாமுவேல்** 7:8-17).*

*இந்த வாக்குத்தத்தம் கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகையில் நிறைவு பெரும். ஒரு ராஜாவின் ராஜ்யம் ஸ்தாபிக்க படுவது மூன்று நிலைகளில் காணலாம்.*

1. *ராஜா வந்தார் ராஜ்யம் அறிவிக்கப்பட்டது ஆனால் அது நிராகரிக்கப்பட்டது. (**மத்தேயு 21:42-43**)*

2. *நம்முடன் வாசமாய் இருப்பதன் பிரசன்னம் மூலம் ராஜா ஆவிக்குரிய ராஜ்யத்தை வெளிப்படுத்துகிறார். **(லூக்கா 17:21, யோவான் 14:21-23)***

3. *ராஜா இரண்டாம் வருகையில் தாவீதின் அரசாங்கத்தை நிலைநாட்டுவார், இஸ்ரவேலை மீண்டும் தன்னிலைக்கு வரச்செய்து 1000 வருடங்கள் பூமியில்*

*அரசாளுவார். (மத்தேயு 24:27-30, அப்போஸ்தலர் 15:14-17, வெளிப்படுத்தல் 20:1-10)*

### *A. முன்னறிவிக்கப்பட்ட ராஜா*

***2 சாமுவேல் 7:12, "உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்***

***ஏசாயா 9:6-7, 6. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். 7. தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்திலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.***

### *B. ராஜாவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது*

***லூக்கா 1:30-33, 30. தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். 31. இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. 32. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். 33. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும்***

*அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.”*

*லூக்கா 2:8-11, 8. அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். 9. அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். 10. தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். 11. இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்*

## *C. ராஜாவின் வம்ச வரலாறு*

*மத்தேயு 1:1, இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு அடங்கிய புத்தகம்.தாவீதின் குமாரன் ,ஆபிரகாமின் குமாரன்:*

*லூக்கா 3:32-38,*

## *D. தீர்க்கதரிசனங்களை ராஜா நிறைவேற்றுதல்*

*மீகா 5:2, எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது”*

*ஏசாயா 7:14, ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை*

*கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.*

*எரேமியா 31:15, ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ”*

*சகரியா 9:9, “சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.*

*உங்களுக்கு நேரம் இருக்கும்போது பின்வரும் வசனங்களை ஒப்பிட்டு பாருங்கள்:*

*ஆதியாகமம் 3:15 உடன் கலாத்தியர் 4:4,*
*ஓசியா 11:1 உடன் மத்தேயு 2:14-15,*
*மல்கியா 3:1 உடன் லூக்கா 7:24-27,*
*சங்கீதம் 2:7 உடன் மத்தேயு 3:17,*
*சங்கீதம் 41:9 உடன் லூக்கா 22:47-48,*
*சகரியா 11:12 உடன் மத்தேயு 26:15,*
*ஏசாயா 50:6 உடன் மத்தேயு 26:67,*
*சங்கீதம் 22:7 உடன் லூக்கா 23:35,*
*சங்கீதம் 22:17 உடன் மத்தேயு 27:35-36,*
*சங்கீதம் 69:21 உடன் மத்தேயு 27:34,*
*சங்கீதம் 34:20 உடன் யோவான் 19: 32-36,*
*சங்கீதம் 16:10 மற்றும் 49:15 உடன் மாற்கு 16:6-7*